RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

Asian Research Association

DOI: 10.34256/ijot2133

# மலையாள இலக்கியங்களில் பெண் மொழி

அ. சரண்யா [அ,*]

[அ] தமிழ்த்துறை, இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613010, தமிழ்நாடு, இந்தியா

# The voice of women in the Malayalam Literatures

T. Saranya [a,*]

[a] Department of Tamil, School of Indian Languages & Comparative Literature, Tamil University, Thanjavur – 613010 Tamil Nadu, India

*Corresponding author Email: neelasaran1991@gmail.com

DOI: https://doi.org/10.34256/ijot2133

Received: 04-06-2021; Revised: 13-07-2021; Accepted: 14-07-2021 Published: 18-07-2021

**Abstract:** The word bursa means keeping your face open. Barda's opposite is that sabita, the central character of the novel, has opened her face. He has also opened his mind. It is learnt that Muslims question the rituals of their religion, which sabita denies saying that it is the highest of all, and that only those who belong to their minds can reach heaven. Moreover, christianity withdraws from the true and light redeemer of the spiritual violations committed in the name of religion, the atrocities that take place within monasteries, and the spiritual and light that prompted him to get out of life that he had been conducting for more than twenty-four years. Although both belong to a different religion, this article reveals that their theocratic principles are the same.

**Keywords:** Malayalam Literature, Women, Religion, Spiritual

## முன்னுரை

இருசேர் இருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

பர்ஸா ஆமென் இரு நூல்களில் ஸபிதா ஜெஸ்மின் இருவரும் வேறு வேறு மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் சொல்ல வரும் கருத்துகள் ஒரே மாதிரியாக அமைகின்றன. தன் மதத்தில் நிகழும் கொள்கை கோட்பாடுகள் பற்றியும், அவர்களைச் சுற்றியுள்ளர்களின் செயல்களை பற்றி எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கமாகும் (Jesmi Sister, 2016; Mumtaz & Yusuf, 2009).

'குர்ஆன்' வலியுறுத்தும் உத்தமம் பெண்களின் ஒரு முன் மாதிரியாகத் திகழ்பவள். தனது ஒவ்வொரு சுவடு வைப்பிலும் இறை நம்பிக்கையிலேயே முயற்சி செய்துக்கொண்டிருப்பது போல் தோன்றும். மேலும் இந்நாட்டை விட்டு வேற நாட்டிற்கோ அல்லது இந்தியாவிற்கோ எப்போதாவது சென்றிருக்கிறீர்களா? என்றால் அவளது பதில் அவ்வளவு சுவாரஸ்சியமாகக் கூறியதை இங்கு காணலாம்.

"இந்த புண்ணிய தேசத்தை விட்டு வேறெங்கும் போக வேண்டிய நிர்பந்தம் இதுவரைக்கும் எனக்கு ஏற்படவில்லை"

இறைவன் மீதும் தன் நாட்டின் மீதும் மிகுந்த அனுகிரகம் கொண்டவளாக வெளிப்பட்டாள். மேலும் இறைவனிடம் கொண்டிருந்த பக்தியால் தன் நாட்டை விட்டு வேற எந்த நாட்டிற்கும் செல்ல விரும்பவில்லை. அவர்களுக்கு எல்லாமே தன் இறைவன், இறைவனுடைய கொள்கை, கோட்பாட்டை

மட்டுமே உயிராக எண்ணி வாழ்ந்தனர் என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது. இஸ்லாமியர்கள் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாதவர்களாகவே இருக்கின்றன.

## ஒரே மதத்தில் பிறப்பதற்குக் காரணம்

"ஒரு நபர் குறிப்பிட்ட மதத்தில் பிறப்பதற்கு முன்னோர்களின் தேர்வின் தொடர்ச்சி தானே காரணமாக அமைகிறது. பிறப்பு சார்ந்து மட்டுமே ஒருவர் பூரண மத நம்பிக்கையாளராக வார்க்கப்பட்டு விடுவதில்லை என்பது உனக்கும் தெரியுமல்லவா? நானும் இந்தப் பயணத்தில் ஈடுப்பட்டிருப்பவள்தான். உனைப் போல இஸ்லாமித்தை நோக்கிச் செல்லும் ஒரு பயணி."

ஒருவர் ஒரு மதத்தில் பிறப்பதற்கும் எம்மதத்தையே தொடர்வதற்கும் நம் பெற்றோர்கள் மற்றும் முன்னோர்கள் காரணம் என்று சொல்ல முடியாது. எனக்கு விருப்பம் இருந்தால் நான் எப்போது வேணுமானாலும் எந்த மதத்திற்கும் மாறிக்கொள்வேன். இதற்கு எங்கையும் எந்த தடையும் கட்டுப்பாடு விதிக்கப்படவில்லை. இறைவன் என்பவன் ஒருவரே நீ எப்போது மற்றவர்களுக்கு எவ்வித தீங்கும் செய்யாமல், அறநெறியில் நல்லொழுக்கத்துடன் இறைக்கொள்கைகளை பின்பற்றுகிறாயோ அப்போதே இறைவன் உன்னுடன் இருக்கிறார். நீயும் மன அமைதியுடனும் வாழலாம். இதற்கு முன்னோர்களும் பெற்றோர்களும் இங்கு தேவையில்லை என்பதை நாம் உணர வேண்டும்.

ஹைதராபாத்தைச் சேர்ந்த பக்தூரா ஆயிஷா சௌதிக்கு வந்து ஏழு வருடங்களுக்கு மேலாகிறது. பேச்சிலும் நடவடிக்கைகளிலும் பக்தி நிரம்பியோடும்.

நாடு விட்டு நாடு போய் வேலைப் பார்த்தாலும் தன் செயல்கள் தன் வேலைகள் அனைத்திலும் இறைவன் மீது கொண்டிருக்கும் அன்பையும், பக்தியையும் மன உறுதியையும் கூறாமல் இருக்க முடியாது. பெண்கள் அயல்நாடுகளுக்கு சென்று வேலைப் பார்த்தாலும் இறைக்கொள்கையைப் பின்பற்றி வாழ்வதை உணர்த்துகிறது (Citamparam Ravichantiran, 2017).

## இஸ்லாத்தில் தீரா நம்பிக்கை

இந்த பூமியில் அவருக்கு பூக்கள் அர்ப்பணம் செய்யப்படுகின்றன. நாளை, மறுமையில்? மறுமையில் என்ன நடக்குமென்று நமகென்ன தெரியும் அல்லாஹீவுக்கு இந்த மனிஹ்டன் உவப்பானவனா, இல்லையா என்பதை நம்மால் யூகிக்க முடியாதல்லவா?

பக்தூரா ஸபிதா ஏன் யூகிக்க முடியதென்று சொல்கிறீர்கள்? அவர் ஒரு முஸ்லீம் இல்லையென்பது உங்களுக்கு தெரியாதா?

ஸபிதாவின் மனதினுஸ் ஒரு இரும்புக் கம்பியைக் காய்ச்சிச் சொருகியது போல் இருந்தது. இவர்கள் என்ன சொல்ல வருகிறார்கள்.

இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளாத ஒரே காரணத்திற்காகப் பூமியில் உள்ள எல்லா நல்ல மனிதர்களும் நரகத்தில் தள்ளப்படுவார்கள் என்று நம்புகிறீர்களா."

இன்றைய காலத்தில் இறைவனுக்கு பூக்களை அர்ச்சனை செய்து வழிப்பட்டு வருகின்றன. வரும் காலங்களில் என்ன செய்வார்கள் என்று யாருக்கு தெரியும் என்று தெரியும் இப்பொழுது இறைவனுக்கு நெருக்கமாக இருக்கும் மனிதன் அடுத்த பிறவியில் எப்படி இருப்பான் என்று எதையும் உறுதியாக நாம் சொல்ல முடியாது. இதில் முஸ்லீம்ங்கள் பலர் தன் மதத்தை தவிர மற்ற மதத்தவர்கள் எவ்வளவு தானம் தர்மம், நன்மைகள் அவர்களுக்கு மறுபிறவியே கிடையாது என்று தீர்க்கமாக சொல்வது மன வறுத்தத்திற்குரியதாகும். இவற்றை எப்படி இவ்வளவு உறுதியாக சொல்ல முடியும். இறைவன் என்பவர் ஒருவரே அவரை வழிப்படும் விதம் மாறுமே தவிர கொள்கை கோட்பாடுகள் எப்போதும் மாறாது. மற்றவர்கள் மீது கருணை, இறக்கம், அன்பு, பிற உயிர்களை துன்புறுத்தக்கூடாது என்றே அனைத்து மதங்களும் போதிக்கின்றனர், ஆனால் இஸ்லாமியர்கள் இதனை மறுக்கின்றனர்.

"இதிலென்ன சந்தேகம் பக்தூரா? சஹாகத்துக் கலிமாவை மனதில் சொல்லி உறுதிப்படுத்திக்கொள்ளாத யாருமே சொர்க்கத்தை அடைய முடியாது. மகாத்மா காந்தியும் மதர் தெரஸாவும் நரகத்திற்குதான் போவார்களா? சந்தேகமில்லாமல் அப்படிதான் அப்படிதான் என்றால் பக்தூரா ஆஸியா,"

ஸபிதா ஆஸியா இருவரும் ஒரே மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் மனிதத் தன்மையை மதிப்பிடும்போது அவர்கள் இருவரும் வேறுபடுகிறார்கள். கலிமாவை மனதில் சொல்லி

உறுதிப்படுத்தாத யாரும் சொர்க்கத்தை அடைய முடியாது என்று ஆஸியா கூறினாலும் அதை மறுத்து நல்லது செய்பவர்கள் அனைவரும் சொர்க்க நிலையை அடைவார்கள். அப்படி இல்லையென்றால் எனக்கு இம்மதமே தேவையில்லை என்று கூறும் ஸபிதாவின் மனதை இதன் மூலம் அறிய முடிகிறது.

ஆண்களைவிட பெண்கள் அதிக பக்தியுடையவர்கள். ஆனால் அதே சமயம் பக்தியே வேணாம் என்று கூறும் அளவிற்கும் தயங்கமாட்டார்கள். "பெண்களை நம்பிக்கையாளர்களின் மாதா" என்று நபிகளார் குறிப்பிடுகிறார்.

## திருதூதரின் மனைவியர்கள்

"திருதூதரின் மனைவியர்கள் பரிசுத்தமானவர்களாகக் கருதப்பட வேண்டும் என்பது எவ்வளவு உயர்ந்த பதவியை இறைவன் அவர்களுக்கு அருளிச் செய்திருக்கிறான். நம்பிக்கையாளர்களின் மாதா என்றல்லவா பதினெட்டு வயது நிரம்பாத ஆயிஷாவை நபிகளார் அறிமுகம் செய்து வைக்கிறார்."

இறைவனுக்கு தூதுவனாக இருக்கும் நபிகளார்க்கு எவ்வளவு மரியாதையும் அன்பும் செலுத்துகிறோமோ அதைப் போல அவரது மனைவியர்களுக்கும் மரியாதையுடன் என்றும் மாதாப் போல போற்றவேண்டும் என்று திருகுர்ரானில் குறிப்பிட்டிருப்பதை இங்கு அறிய முடிகிறது.

"அந்த பரிசுத்த பாரத்தால்தால் நபிகளாரின் மரணத்திற்குப் பிறகும் பதினெட்டு வயது ஆயிஷா உட்பட அவரது மனைவியர் அனைவரும் இலௌகிக வாழ்க்கையை துறந்து முன்மாதிரியான வாழ்க்கையை வாழ்ந்து இறந்து போனார்கள். ஐம்பது வயதான பின்பும் இறைத்தூதராக வாழ்ந்தபோதும் கொள்கை பற்றுடையவராகத் திகழ்ந்தபோதும் இதுவெல்லாம் முகமதுவுக்கு தடையாக இருக்கவில்லை. இந்த சிந்தனை என்னை ஆட்கொண்டிருக்கிறது ரஷிது. ஆணுக்கு இலௌகிகமும் பெண்ணுக்கு இலௌகீகமின்மையும் என்பதை உயர்ந்ததது. நோக்கமாகக் கொண்டிருக்கும் இந்த மனோபாவம்.

குர்ஆனில் கூறியிருப்பதைப் போலவே நபிகளாரின் ஆறு மனைவியர்களும் தன் கணவன் இறந்த பிறகும் தன் ஆசைகள், உணர்வுகள் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தி எல்லாருக்கும் முன் மாதிரியாக வாழ்ந்து வந்தனர். தன் கணவனுக்கு பிறகு வெறெதுவும் தேவையில்லை. அவருடைய நினைவிலேயே வாழ்ந்துவிடலாம் என்ற நம்பிக்கையிலேயே இறைத்தொண்டினை செய்து வந்தனர். ஆண்கள் ஐம்பது வயதிற்கு பிறகும் பதினெட்டு வயது இளம் பெண்ணை திருமணம் செய்து இலௌகீக வாழ்க்கையை வாழ்ந்தார். ஆனாஅல் அந்த பதினெட்டு வயது பெண் விதவையானால் அவள் கடைசி வரைக்கும் விதவையாகவே வாழ்ந்து உணர முடிகிறது. இறைவன் மீது கொண்டிருந்த பற்றின் காரணமாக அவள் யாரும் மீது தன் ஆசைகளை வளர்த்துக்காமல் இறை நம்பிக்கையையே தன்னுடைய வாழ்க்கையாகக் கொண்டிருந்ததை இதன்வழி அறியமுடிகிறது. இன்றைய சூழலிலும் தன் கணவரையே கண்கண்ட தெய்வமாக நினைத்து வாழும் பெண்களையும் இன்னமும் பார்க்க முடிகிறது. ஸபிதா ஆஷிக்கை ஆச்சரியத்துடன் பார்த்தார்.

ஸபிதா மற்றவர்களிடம் நல்ல குணமாக நடந்துக்கொள்வது மட்டும் அல்லாமல் எல்லா மதத்தையும், எல்லா உயிர்களையும் மதிக்கக்கூடியவள் எல்லோரிடத்திலும் அன்பு செய்பவள் தன் கடமைகளை சரியாகச் செய்பவளாக இருந்துவந்தாள். ஆனால் 'ஆஸியா' அப்படியே எதிரான குணமுடையவளாக இருக்கிறாள். தன் மதம் மட்டுமே உயர்வானது தன் மதத்தை சார்ந்தவர்கள் சொர்க்கதை அடைவார்கள் என்று கூறும் போது இருவரின் வேறுபட்ட மதத்தை அறியமுடிகிறது.

## பாவ மன்னிப்பு அளிக்கும் நிலையில் ஜெஸ்மி

"நீ பாவ மன்னிப்பு அதிகாரம் உள்ள பாதிரியராக இருந்திருந்தாள் என்னுடைய தவறான ஆசைக்காக உன்னிடம் நான் பாவ மன்னிப்பு கேட்டிருப்பேன். இப்பொழுது எனக்காக பிராத்திக்கும்படி மட்டுமே என்னால் சொல்ல முடியும்.

இறைவனிடம் கொண்டிருந்த பக்தியின் காரணமாக ஆண் பாதிரியாருக்கே பாவ மன்னிப்பு அளிக்கும் அளவிற்கு ஜெஸ்மி ஏசுவிடமிறை பக்தியுடன் இருந்தர். மனிதர்களிடம் எந்த ஏற்றத்தாழ்வும் பார்க்காமல் ஒரே மாதிரியாக எல்லோரிடமும் நடந்துக்கொண்டார்.

"மேமி பிராத்தனை நேரங்களில் நீ உயர் நிலைக்குச் செல்வதை நான் கவனித்திருக்கிறேன். நீ அனுபவக்கிற பரமானந்த அனுபவத்தை பகிர்ந்துக்கொள்ள இயலுமா.

ஏசுபிரான் பரிசுத்தமான ஒரு நன்கொடை இதை, அவர் தன்னுடைய ஒவ்வொரு மணவாட்டிற்கும் அளிப்பாரென்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நாமெல்லாம் இதை ஒன்றாக அனுபவிக்கும்போது சொர்க்கம் பூமியில்தான் இருக்கிறது என்று கூறும் அளவிற்கு ஏசுவிடம் எவ்வளவு பக்தி கொண்டவர்களாக இருக்கிறார் என்பதை இதன் மூலம் அறிந்துக்கொள்ள முடிகிறது.

## ஜெஸ்மேமியின் உள்ளத்தில் ஏசுபிரான் அமர்ந்திருத்தல்

"கர்த்தா என்னுள்ளிருந்து அகன்றுவிடுவீராக ஏனெனில், நானொரு பாவியாக இருக்கிறேன் (லூக்கா: 5,8) ஒவ்வொரு திருப்பிலியின்போதும் என்னுள் நிகழும் அவருடைய தீவிரமான நெருக்கம் என்னால் தாங்க இயலாததாக இருக்கிறது. என்னுடைய இருதயம் தகர்ந்துபோவதுபோல் நான் அவரிடம் மன்றாடினேன்.

இறைவனிடம் பிராத்தனை செய்துக்கொண்டிருக்கும்போது இறைவன் தன் உடம்பின் மீது இறங்கியதை ஜெஸ்மியால் தாங்கிக்கொள்ள முடியவில்லையென்றும் இனிமேல் என்மேல் இறங்க வேண்டாமென்று வருந்துவதையும், மேலும் அக்காலக்கட்டத்தில் மடத்தில் நடந்த எந்த குற்றங்களையும் யாரிடமும் கண்டுபிடிக்க இயலாமலிருந்ததாகவும் அவரைத் தவிர யாரிடமும் பேச முடியவில்லை என்று கூறுவதை இங்கு அறியமுடிகிறது. இறைவனிடம் மேமியிம், மேமியிடம் இறைவனும் எவ்வளவு பக்தியுடனும் நெருக்கத்துடனும் இருக்கிறார் என்பதை இதன் மூலம் காணலாம்.

## நிர்வாகத்தை தட்டிக்கேட்டார்

இறைவன் ஒருவரே நமக்கு போதும். இவ்வுலகில் வேற யாரும் தேவையில்லை என்று தன் வாழ்க்கை, குடும்பம், சுற்றத்தார்கள், சுகபோக வாழ்க்கை எல்லாவற்றையும் விட்டுவிட்டு இறைவன் ஒருவரே எல்லாம் என் எண்ணிக்கொண்டு வாழும் கன்னியாஸ்திரிகள் பலர் சுயநலத்தோடும், தன்னைச் சுற்றியிருப்பவர்களிடம் சாதி பாகுப்பாடு பார்த்தால், ஏழை மாணவிகளை கஷ்டப்படுத்துவதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். அமலாக் கல்லூரியில் இது போன்ற நிகழ்வுகள் அதிகமாக காணப்பட்டன.

"ஜெஸ்மி இதெல்லாம் நானாக விருப்பப்பட்டு செய்ததில்லை. எனக்கு மிகவும் நெருக்கடி இருக்கிறது. உங்களால் இயலுமென்றால் அந்த சான்றிதழைத் திரும்ப வாங்கிவிடுங்கள். துணை முதல்வருக்குத் தெரியாமல் நான் சரியான வேறொரு நடத்தைச் சான்றிதழ்களைத் தருகிறேன்.
தன்னுடைய உரிமைகளை தட்டிக்கேட்ட மாணவர்களுக்கு நன்னடத்தைச் சான்றிதழில் எல்லார்க்கும் மோசம் என்றே எழுதியிருக்கிறார். அவற்றையெல்லாம் தட்டிக்கேட்ட ஜெஸ்மியை அவர்களால் எவ்வளவு கொடுமைகள் செய்ய முடியுமோ அவ்வளவு கொடுமைகளையும் செய்து வந்தனர். அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் இறை நம்பிக்கையுடன் அவர் மன உறுதியுடன் செயல்பட்டார் என்பதை,

"எல்லாருமே உனக்கு எதிராக இருக்கிறார்கள். ஆனால் ஹாஸ்டல் சமயறை சிஸ்டர் மட்டுமே உனக்கு ஆதரவாக எழுதியிருக்கிறார். நீ ஆவிலாவில் புனித தெரஸாவைப் போல் இருப்பதாக சிஸ்டர் சொல்கிறார்.

தங்கும் விடுதியிலிருந்து படிக்கும் கல்லூரி வரை ஏற்றத்தாழ்வு சுயநலம் மேலோங்கி இருப்பதை இங்கு வெளிப்படையாக தெரிகிறது.

## உரிமைகளுக்கு தடைவிதித்தல்

"அலமாரியில் இரண்டு வீடியோக காஸெட்டுகள் வைத்திருந்தது நினைவுக்கு வந்தது. தமாமிலிருக்கும் என்னுடைய சகோதரன் தந்த காஸெட்டுகள் அதை வீட்டில் ஒப்படைப்பதற்காக டிவியின் சாவியைத் தேடிய போது வைத்த இடத்தில் காணவில்லை. அதைக் கையாளுகிற எலக்டிரீஷியனிடம் கேட்டபோது நீங்கள் டிவி பார்க்கக்கூடாது என்பதற்காகச் சாவியை எந்த இடத்திலிருந்து எடுத்துவிட்டார்கள். சாவி இருக்கிற இடத்தை உங்களுக்கிட்ட சொல்லக்கூடாது என்பது உத்தரவு. ஒரு கன்னியாஸ்திரியை தனிமைப்படுத்தி தள்ளிவைப்பது என்பது ஒரு வகையான தண்டனை.

10.34256/ijot2133

எல்லோரிடமும் அன்பும், கருணை, இறக்கம், அக்கரையுடன் செயல்படுவார்கள். இவ்வுலகில் யாருக்கும் பிடிப்பதில்லை. சி. எம். சி மடத்தில் இருப்பவர்கள் பாதி பேர் சுயநலமும், வக்கிரபுத்தியும் உடையவர்களாகவே இருக்கிறார்கள். பிறர் மீது அன்புடனும், அறிவுடனும் நேர்மையாகவும் இருப்பவர் ஜெஸ்மி அவர்கள், அவர் ஏழை, பணக்காரர் என்ற ஏற்றத்தாழ்வு பார்க்காமல் மற்றவர்களுக்காக வாழ்ந்துகொண்டிருப்பவர் மேலும் இறைவனிடம் மிகுந்த பற்றுக்கொண்டு வாழ்பவர் ஆனால் அவரை யாருக்கும் பிடிக்காமல் தனிமைப்படுத்தி பல இன்னல்களை செய்து வந்தனர். ஒரு மடத்துக்கொள் இவ்வளவு சிக்கல்களோடு பல கன்னியாஸ்திரிகள் வாழ்ந்துகொண்டு இருக்கின்றனர். இரு கன்னியாஸ்திரிகள் நெருக்கமாக பேசிக்கொண்டால் அதையும் தவறான கண்ணோட்டத்தில் அவதூறாக பேசி வந்தனர்.

“சிஸ்டர் ஜெஸ்மிக்கும் சிஸ்டர் மரியாவுக்கும் இடையே பிரத்தே நட்பு இருக்கிறாத என்பதை எங்களால் உறுதிபடச் சொல்ல முடியவில்லை. ஆனால் சிஸ்டர் மரியா இருக்குமிடத்தில் சிஸ்டர் ஜெஸ்மியை பார்க்க முடியும்.”

இந்த விஷயத்திலும் அமலாக் கல்லூரியில் உள்ளவர்கள் ஒருபக்க நியாயமாகவே செயல்பட்டு வந்தனர். பிரேத்தேக நட்பு உருவானால் சமூகம் அதை வெறுமனவே முனுக்கும் பணக்காரர்கள் தவறு செய்தால் அவர்களைப் பற்றி உலகம் எதுவும் பேசாது. அதே தவறை ஏழை கன்னியாஸ்திரிகள், ஜீனியர்கள் செய்திருந்தால் பிரேத்தேக நட்பு என்னும் அவச்சொல்லுக்கு ஆலாகியிருப்போர்கள் இதற்காகவே மரியாவும், ஜெஸ்மியும் மற்றவர்கள் முன்பு எதிர்கள் போலவே காட்டிக்கொண்டு கடிதங்கள் மூலம் பேசிக்கொண்டு வாழ்ந்துவந்தனர். குடும்பம் எதுவுமே வேண்டாம் இறைவன் ஒருவனே நமக்கு எல்லாம் என்று வந்தாலும் இவ்வளவு இன்னல்களுக்கு ஆளாக வேண்டியுள்ளதை இதன்வழி அறியமுடிகிறது.

## ஒப்பீடு

ஸபிதா, ஜெஸ்மி இருவரும் வேறு மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் ஒரே மாதிரியான மனவேதனைக்கு ஆளாகியுள்ளதை இங்கு பார்க்க முடிகிறது. இறைவன் மீது இருவரும் தீரா பக்தியுடன் இருக்கிறார்கள். ஆனால் அவர்களைச் சுற்றியுள்ளவர்கள் சுதந்திரமாக இருக்கவிடவில்லை. அவர்களைச் சுற்றி சுயநலமும் என் மதம் மட்டும் தான் பெரியது என்ற நிலையிலேயே இருந்துவந்தனர். இதனால் அவர்கள் மனம் உடைந்து எங்கள் மதமும் தேவையில்லை, மடமும் வேண்டாம் என்று கூறும் அளவிற்கு அவர்களை மன நிலையை இங்கு காண முடிகிறது.

## முடிவுரை

பர்ஸா என்ற சொல்லுக்கு முகத்தை திறந்து வைத்தல் என்று பொருள். பர்தாவின் எதிர்பதம் இந்நாவலின் மையப் பாத்திரமான ஸபிதா முகத்தைத் திறந்துவைத்திருக்கிறாள். அதன் மூலம் மனதையும் திறந்துவைத்திருக்கிறார். இஸ்லாமியர்கள் தன்னுடைய மதம் தான் எல்லாவற்றையும் விட உயர்வானது, தன் மனதை சார்ந்தவர்கள் மட்டுமே சொர்க்கத்தை அடைய முடியும் கூறுவதை ஸபிதா மறுத்தும் அதன் சடங்குகளை கேள்விக்குட்படுத்துவதை இங்கு அறியமுடிகிறது. மேலும் இருபத்து நான்கு வருடங்களுக்கும் மேலாக நடத்தி வந்த வாழ்க்கையிலிருந்து வெளியேற அவரைத் தூண்டியவை மதத்தின் பெயரால் செய்யப்படும் ஆன்மீக மீறல்கள், மடங்களுக்குள் நிகழும் ரகசிய கொடுமைகள், உண்மையும் ஒளியுமான மீட்பரிடமிருந்து கிருத்துவம் விலகுகிறது. இருவரும் வேறு மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுடைய இறைக்கொள்கை கோட்பாடுகள் ஒரே மாதிரியே அமைந்துள்ளதை இக்கட்டுரை வழி அறிய முடிகிறது.

## References

Citamparam Ravichantiran, (2017) Mutivillathathu: Malaiyala kathaikal, Putuppunal, Chennai, India.

Jesmi Sister, (2016) Amen, 4th edition, Kalachuvadu Publications, Chennai, India.

Mumtaz, K., Yusuf, K.M., (2009) Bursa, 2nd edition, Kalachuvadu Publications, Chennai, India.

**Acknowledgement**

Nil

**Funding**

This study was not funded by any grant

**Conflict of interest**

The author declare that they have no actual or potential conflict of interest, including financial, personal or other relationships with people or organizations that could have inappropriately influenced this work.

**About the License**

© The author(s) 2021. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

**Cite this Article**

T. Saranya, The voice of women in the Malayalam Literatures, Indian Journal of Tamil, 2(3) (2021) 15-20. https://doi.org/10.34256/ijot2133